Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 48

வெள்ளிக்கிழமை 13 ஜனவரி 2023

மார்கழி 29 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

இணைந்த வடக்கு – கிழக்கு மாகாண

## கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா மறைந்தார்



யாழ்ப்பாணம், ஜன. 13

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த காலப்பகுதியில் கல்வி அமைச்சின் செயலாளராக இருந்தவரும், மிகச்சிறந்த ஆளுமையாளனுமான சுந்தரம் டிவகல்லாலா காலமானார்.

வடக்கு-கிழக்கில் போர் »11

உள்ளூராட்சித் தேர்தல்

## தேசிய மக்கள் சக்தி யாழில் கட்டுப்பணம்!

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை தேசிய மக்கள் சக்தி நேற்றுச் செலுத்தியது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் இராம »11

உள்ளூராட்சித் தேர்தல்

## புதிய கூட்டணி தொடர்பில் கட்சிகள் நேற்றும் சந்திப்பு!

சின்னம் தொடர்பில் இழுபறி

யாழ்ப்பாணம், ஜன. 13

தமிழ்த் தேசியக் கட்சிகள் உள்ளிட்ட தரப்புகள் உள்ளூராட்சித் தேர்தலுக்கான கூட்டணியொன்றை அமைக்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மண்டபமொன்றில் நேற்று வியாழக்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டன. »09

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; மைத்திரியும் பொறுப்பாளி!

10 கோடி ரூபா இழப்பீடு வழங்குமாறு
உயர்நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பு



**கொழும்பு, ஜனவரி 13**

**உளவுத் தகவல்கள் கிடைத்தும் ஈஸ்டர் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியமை குற்றமே. இதனால், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 10 கோடி ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.** »11

புதிய அரசியல் கூட்டணி

## பெயர், சின்னம் தொடர்பில் இன்று இறுதித் தீர்மானம்!

நாளை ஒப்பந்தம் கைச்சாத்து

யாழ்ப்பாணம், ஜன. 13

உள்ளூராட்சித் தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கட்சிகள் அமைத்துவரும் பரந்துபட்ட அரசியல் கூட்டணி தொடர்பில், கட்சித் தலைவர்கள் இன்று முக்கியமான பேச்சுக்களில் ஈடுபடவுள்ளனர் என்று தெரியவருகின்றது. »09

## ராஜபக்சக்களை நிராகரியுங்கள்!

உலக நாடுகளைக் கோருகின்றார்
நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத்

கொழும்பு, ஜன. 13

ராஜபக்சக்களை கனடா மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்தும் நிராகரிக்க வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் »09

யாழ்.மாநகரசபை

## பதில் முதல்வராக ஈசன் பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ். மாநகரசபையின் பதில் முதல்வராக துரைராசா ஈசன் நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றுள்ளார். »11


## சுதந்திரதின நிகழ்வு: தமிழில் தேசிய கீதம்

ஜனாதிபதி உரை இல்லை!

கொழும்பு, ஜன. 13

இலங்கையின் 75ஆவது சுதந்திரதின விழாவில் தமிழ்மொழியிலும் தேசிய கீதம் இசைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்தார். »11





## போதைக்கு அடிமையாகி மறுவாழ்வு பெற்றவர் பலி

வவுனியா, ஜன. 13

போதைப்பொருளுக்கு அடிமையாகி வவுனியா பூந்தோட்டம் மறுவாழ்வு நிலையத்தில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். »11

## மாங்குளத்தில் விபத்து ஒருவர் பரிதாபச் சாவு!

வவுனியா, ஜன. 13

மாங்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். பளை - வேம்பொடுகேணியைச் சேர்ந்த ரமேஷ்வரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

குளியாப்பிட்டியவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி முட்டைகளை ஏற்றிவந்த சிறிய கப் ரக வாகனம், வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் »09

தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைக்கான

## உணவுத்தவிர்ப்புப் போர் கைவிடப்பட்டது நேற்று!

முல்லைத்தீவு, ஜன. 13

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையை வலியுறுத்தி, முன்னாள் போராளி ஒருவரால் முன்னெடுக்கப்பட்ட உணவுத் தவிர்ப்புப் போராட்டம் கட்சித் தலைவர்களின் எழுத்துமூல அறிவிப்பையடுத்து நேற்றுக் கைவிடப்பட்டது.

தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கும் அனைத்துக் கட்சிகளையும், அமைப்புகளையும், தனிநபர்களையும் ஓரணியில் திரள வலியுறுத்தி, முல்லைத்தீவு - »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா – இந்தியா இணங்கினால் 6 வாரங்களுள் நிதி கிடைக்கும்

## மத்திய வங்கியின் ஆளுநர் ஆரூடம்



கொழும்பு, ஜன. 13

சீனாவும் இந்தியாவும் தங்கள் கடன்களை மறுசீரமைக்க உடன்பட்டால் இன்னும் 6 வார காலப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை உடன்பாட்டை எட்டும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- இலங்கைக்கான கடன் தொடர்பில் சீனாவும் இந்தியாவும் ஒப்புக் கொள்ளும் வரை சர்வதேச நாணய நிதியம் பணம் வழங்காது. இரு தரப்பினரும் விரைவாக செயற்படுவது சிறந்தது.

மிகப்பெரிய கடன் வழங்குபவராக இருக்கும் சீனாவுக்கு இந்த விடயத்தில் அதிக பொறுப்பு உள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தாமதிக்க நேரம் இல்லை என்பதால், சீனாவும் தாமதிக்காது என்று நம்புகின்றோம். சீனா -இந்தியா இருதரப்பு கடன்கொடுநர்களும் இணங்கினால் இன்னும் 6 வாரக்காலப் பகுதியில் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை உடன்பாட்டை எட்டமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



# தமிழக முதலமைச்சருக்கு சுமந்திரன் நினைவுப் பரிசு

சென்னை, ஜன.13

தமிழ்நாட்டில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினத்தில் பங்கேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நினைவுப் பரிசிலும் வழங்கினார்.

தமிழ்நாடு அரசாங்கத்தின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நேற்றுமுன்தினமும், நேற்றும் நடைபெற்றது. (எ-இ)

# பயங்கரவாதத் தடைநீக்கம் கட்டார் நிறுவனம் உதவி!

கொழும்பு, ஜன. 13

இலங்கை அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட பயங்கரவாதத் தடை நீக்கப்பட்டதை அடுத்து கட்டார் தொண்டு நிறுவனமொன்று மீண்டும் இலங்கையில் தடம் பதித்துள்ளது.

குறித்த நிறுவனம் கட்டார் அரசாங்கத்தின் முக்கியமான தொண்டு நிறுவனமாகும். இது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் பல்வேறு குற்றச்சாட்டுகளால் இந்த நிறுவனம் தடைசெய்யப்பட்டது.

இந்த நிலையில் கடந்த ஆண்டு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறித்த நிறுவன அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடிய தன் பின் தடை நீக்கப்பட்டது.

11.7 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியிலான மனிதாபிமான உதவிகளை இந்தாண்டு வழங்குவதற்கு இந்த நிறுவனம் அறிவித்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார். (ச-இ)



# யாழ். பல்கலைக்கழகத்தில் மலையக தியாகிகள் தினம்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் மற்றும் மலையக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மலையக தியாகிகள் நினைவேந்தல் யாழ்.பல்கலைக்கழக பிரதான நினைவுத்தூபியில் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மலையக வாழ் மக்களின் அறப் போராட்டங்களில் உயிர்நீத்த தியாகிகளின் திருவுருவப்படத்துக்கு ஈகைச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

நினைவேந்தலில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர், மலையக மாணவர் ஒன்றியத்தினர், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஓ-14,125)

# நீண்டகாலமாக மாடுகளை திருடிய நபர் கைதாகினார்

யாழ்ப்பாணம், ஜன. 13

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு, மடத்தடி, இருபாலைப் பகுதிகளில் நீண்ட காலமாக மாடுகளைத் திருடி விற்பனை செய்து வந்த நபரொருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருபாலைப் பகுதியில் மாட்டைத் திருடி விற்பனை செய்ய முயன்ற போது மாட்டின் உரிமையாளரால் இனங்காணப்பட்டு கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபர் எனவும் அவர் நீண்டகாலமாக மாடுகளைத் திருடி விற்பனை செய்து வந்துள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ-14,26)



# பொங்கலை முன்னிட்டு மண்பானை வியாபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 13

தைப்பொங்கலை முன்னிட்டு திருநெல்வேலிப் பொதுச்சந்தையை அண்டியுள்ள பகுதியில் மண்பானை வியாபாரம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது.

தைப்பொங்கல் திருநாள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் மண்பானை வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கமைய பொதுமக்கள் பலர் ஆர்வத்துடன் மண்பானையைக் கொள்வனவு செய்து வருகின்றனர். (ஓ-14,66)

# 4 உணவுப்பொருள்கள் விலை சதொசவில் மேலும் குறைப்பு!

கொழும்பு, ஜன. 13

4 அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வரும்வகையில் குறைக்கப்பட்டுள்ளன என லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய சம்பா அரிசி கிலோ 5 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 220 ரூபாவுக்கும் உள்ளூர் வெள்ளைப் பச்சையரிசி 16 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 189 ரூபாவுக்கும் வெள்ளை நாடு அரிசி 2 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 198 ரூபாவுக்கும் கோதுமை மா கிலோ 5 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 240 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றன என லங்கா சதொச அறிவித்துள்ளது. (ச-இ)

# ஜனாதிபதி ரணிலுக்கு அமெரிக்கா பாராட்டு


நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள சாதகமான நடவடிக்கைகளுக்கு அமெரிக்க அரசாங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க தேசிய பாதுகாப்புச்சபையின் தெற்காசிய பிரிவின் மூத்த பணிப்பாளர் ரியல் அட்மிரல் ஜலின் லொவபக்கர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சந்தித்தார். இதன்போதே அமெரிக்காவின் பாராட்டை அவர் தெரிவித்தார்.

இலங்கை மேற்கொண்டுள்ள புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பொருளாதாரத் திட்டங்கள் குறித்தும் கேட்டறிந்தார். போதைப்பொருள் கடத்தலை தடுப்பது மற்றும் அதற்கு கடல்சார் ஒத்துழைப்பைப் பெறுவது ஆகியவை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் கூட்டிணைவை பாராட்டுகின்ற அதேவேளை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் எனவும் அட்மிரல் ஜலின் லொவபக்கர் சந்திப்பில் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஒற்றுமை மட்டுமே தற்போது தமிழர்களுக்கு உள்ள ஆயுதம்

### உணவு தவிர்ப்பில் ஈடுபடும் மாதவமேஜர் வலியுறுத்து

முல்லைத்தீவு, ஜன.13

தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே ஒன்றுமையை வலியுறுத்தி முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்திவரும் வேலுப்பிள்ளை மாதவமேஜர் நேற்று நான்காவது நாளாகவும் தனது போராட்டத்தைத் தொடர்ந்தார்.

புதுக்குடியிருப்புநகர் பகுதியில் மேற்கொள்ளப்படும் இந்தப் போராட்டத்துக்கு மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் ஆதரவு வழங்கியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மாதவமேஜர், தமிழ் மக்களுக்கு எந்த நாடும் தீர்வைத் தந்து விடப்போவதில்லை என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் விடிவுக்காக ஒன்றரை லட்சம் மக்களை இழந்துள்ளோம். 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை நாங்கள் இழந்துள்ளோம். இன்றுவரை மீள முடியாது சிறைகளில் தமிழ் அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள இப்போது எமக்குத் தேவையானது அரசியல் பலம். அரசியல் பலத்தை இழப்போமானால் குருந்தூர்மலை போன்ற சம்பவங்கள் அனைத்து இடங்களிலும் நடக்கும். இதை உணர்ந்து தமிழ்த் தேசியம் சார்ந்து செயற்படுகின்ற அத்தனைஅரசியல் தலைமைகளும் ஒன்று சேர்ந்து வருவார்களாக இருந்தால் அவர்களே தமிழ்த் தேசியத்தின் தலைவர்கள் என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மாதவமேஜரை நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நேரில் சென்று சந்தித்தார். மாதவமேஜரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அவர், இந்த முயற்சியை மதிக்கின்றோம் என்றும், அதற்காக எந்தளவு தூரம் எம்மால் ஒத்துழைக்க முடியுமோ அந்த எவு தூரத்துக்கு அவருடன் சேர்ந்திருப்போம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (எ-19)



## ஒற்றுமையை வலியுறுத்தி வர்த்தகர்கள் கடையடைப்பு

### மாதவமேஜரின் போராட்டத்துக்கு ஆதரவு

முல்லைத்தீவு, ஜன.13

தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே ஒற்றுமையை வலியுறுத்தி மாதவமேஜர் முன்னெடுத்து வரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்றுப் புதுக்குடியிருப்பில் வர்த்தகர்கள் கடையடைப்புச் செய்தனர்.

புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம், புதுக்குடியிருப்பு முச்சக்கர வண்டிகள் சங்கம், புதுக்குடியிருப்பு அழககு உரிமையாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் இதற்கு ஆதரவு வழங்கினர். (எ-19)

# தனித்துப் போட்டியிடும் முடிவால் கூட்டமைப்புக்கு பாதகமில்லையாம்!

## சிறீதரன் எம்.பி. கூறுகின்றார்

கிளிநொச்சி, ஜன.13

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படும் என்று கருதவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் ஏன் தனித்தனியாக போட்டியிட வேண்டிய தேவை ஏற்பட்டது என்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடுவார். அதுவரை பொறுமையுடன், நிதானத்துடன் இந்த விடயங்களைக் கையாள்வதே பொருத்தம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை இலங்கை தமிழரசுக் கட்சி நேற்றுமுன்தினம் கிளிநொச்சி தெரிவத்தாட்சி அலுவலகத்தில் செலுத்தியது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொர்பில் நாம் பேசி வருகின்றோம். தனித்துப் போட்டியிடும் முடிவால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பாதிப்பு ஏற்படும் என்று எனக்குத் தெரியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், நாடாளுமன்றக் குழுவுக்கும் இரா.சம்பந்தனே தலைமை வகித்துக்கொண்டிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் நாடாளுமன்றத்திலும், சர்வதேச சமூகத்திலும் அடையாளமாகக் கொண்டிருக்கிறது. இது ஓர் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள். இந்தத் தேர்தலின் வடிவம், தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் செயற்பாடுகளின் அடிப்படையில் மக்கள் தெரிவு செய்யவுள்ளனர். அதற்கான களப் பரீட்சையாக பார்க்கலாம். இதில் சாதக பாதக நிலை ஏற்படலாம் - என்றார். (எ-113)

## உள்ளூராட்சித் தேர்தலால் தேசியப் பிரச்சினை தீராது!

### ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.13

உள்ளூராட்சிசபைத் தேர்தலின் ஊடாக தேசியப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது ஆட்சியில் ஊழல், மோசடி இடம்பெறாது. ஊழல்வாதிகளுக்கு எமது ஆட்சியில் தண்டனை வழங்குவோம். இனி யாரும் ஊழல் புரிய முடியாதவாறு சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம். புதிய அரசமைப்பை நாம் தயாரித்து வைத்துள்ளோம். அதை மக்கள் முன்னிலையில் சமர்ப்பிப்போம். சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

இப்போது இருக்கும் அரசமைப்பு மக்கள் ஏற்றுக் கொண்ட அரசமைப்பு அல்ல. இது ஜே.ஆர். அவரது ஆறில் ஐந்து அதிகாரத்தைப் பயன்படுத்தி அவருக்காக உருவாக்கப்பட்டது.

நாம் கொண்டு வருகின்ற அரசமைப்புதான் மக்கள் அனுமதி தருகின்ற அரசமைப்பாக இருக்கும். அது சர்வஜன வாக்கெடுப்பின் மூலமே நிறைவேற்றப்படும். அப்படி நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே அது மக்கள் அனுமதி வழங்கிய அரசமைப்பாகும்.

மக்கள் இப்போது விரும்புவது புதிய ஆட்சியை. அதற்குத் தேவை நாடாளுமன்றத் தேர்தல். அதை அரசு நடத்த வேண்டும் - என்றார். (எ-22)

## சுயேச்சை வாக்குகளை உடைக்கச் சதி முயற்சியாம்!

யாழ்ப்பாணம், ஜன.13

சுயேச்சை குழுக்களுடைய வாக்குகளை உடைப்பதற்காகவே சில அரசியல் கட்சிகள் பிரிந்து போட்டியிடுகின்றன என சுயேச்சை குழு வேட்பாளர் துரைராஜா சுஜீந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் கட்டுப்பணம் செலுத்திய பின்னர் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசியல் கட்சிகள் தங்களுக்குரிய நபர்களை மாத்திரம் இனம் கண்டு வர்க்க ரீதியான செயற்பாடுகளை செய்து வருகின்றார்கள். உண்மையிலேயே ஒடுக்கப்பட்ட மக்களுக்குரிய சந்தர்ப்பத்தை கொடுப்பது வலுகுறைவாக இருக்கின்றது. அதனால்தான் நாங்கள் கடந்த காலங்களிலே சுயேச்சை குழுவாக அந்த மக்களுக்கு உரிய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்கின்ற நோக்கத்துக்காக களமிறங்கி இருந்தோம்.

சுயேச்சைக் குழுவாக இறங்கி வெற்றி பெற்ற எங்களுடைய வாக்குகளை உடைக்க வேண்டும் என்பதற்காக சுயேச்சையாக களம் இறங்க தீர்மானித்திருக்கின்றார்கள். முக்கியமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட சில கட்சிகளும் அவ்வாறே இறங்கி இருக்கின்றார்கள்.

சிறுபான்மை தமிழர்களுடைய வாக்குகள் எல்லாம் தங்களுக்குத்தான் சேரவேண்டும் என்கின்ற நோக்கத்துக்காக இந்த விடயங்களை மேற்கொண்டு வருகின்றார்கள் - என்றார். (எ-20)

## மண்டோஸ் புயல் தாக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு

சாவகச்சேரி, ஜன. 13

மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி தென்மராட்சிப் பிரதேசத்தின் கோவிலாக்கண்டி, கச்சாய், மந்துவில் மேற்கு, மந்துவில் வடக்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த புயலால் பாதிக்கப்பட்ட 7 குடும்பங்களுக்கு முற்பணக் கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் ரூபா இடர் முகாமைத்துவத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

நிவாரணக் கொடுப்பனவு தென்மராட்சிப் பிரதேசெயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-14.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2023



மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர். கிரகங்களில் மெல்ல நகர்பவர். நீதிமானாகச் செயற்பட்டு அவரவரின் முன்வினைகளுக்கு ஏற்ப உரிய பலாபலன்களைக் கொடுத்து, மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர்.

'ஏழரைச் சனி' என்றதும் பயம் கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜன்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர்; இன்பதுன்பங்களை வினைப் படி செயற்படுத்தி வாழவைப்பவர்.

**நிகழும் சுபகிருது வருடம் தை மாதம் 3ஆம் நாள் (17.01.2023) செவ்வாய்க் கிழமை அன்று (திருக்கணிதப் பஞ்சாங்கப்படி), தன் சொந்த வீடான மகர ராசியிலிருந்து மற்றொரு சொந்தவீடான கும்பத்துக்கு பெயர்ச்சி ஆகிறார் சனிபகவான்.** இதனால் தனுசு ராசிக்கு ஏழரைச் சனி காலகட்டம் நிறைவடைகிறது. மீன ராசிக்கு ஏழரைச் சனி தொடங்குகிறது. மகர ராசியினருக்கு ஜன்மச்சனி விலகுகிறது.




அஷ்டமத்துச் சனியிலிருந்து விடுதலை கிடைக்கக்கூடிய பொன்னான காலம் இது. உங்களின் நீண்ட நாள் கனவுகள் நிறைவேறும். கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரும். பாக்கியத்தில் வரக்கூடிய சனிபகவான், உங்களுக்குப் பல ஆசீர்வாதங்களைக் கொடுக்கப் போகிறார்.

திருமண யோகம், வீடு பூமி வாங்குவது அல்லது மாற்றுவது உங்களுக்குச் சாதகமாக அமையும். உங்களில் பலருக்கும் வாகன யோகம் அமையும். வெகுநாள்களாகக் காத்திருந்து தடைப்பட்டுப் போன பிரயாண வாய்ப்புகள் மீண்டும் அமையும்.

நீண்ட நாள்களாக உங்களை மனக் கலக்கத்துக்கு ஆளாக்கிய வழக்குகள் யாவும் முடிவுக்கு வரும்; முடிவு உங்களுக்கு ஆறுதல் தரும். கடன் பிரச்னைகள் கட்டுக்குள் வரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். இந்த ராசிக்காரர்களில் குழந்தை வரம் வேண்டி எதிர்பார்த்திருந்த அன்பர்களுக்குத் தித்திப்பான தகவல் உண்டு. அதேபோல், பிள்ளைகளின் போக்கைக் கண்டு வருத்தத்தில் இருந்த அன்பர்களுக்கு, இந்தச் சனிப்பெயர்ச்சி நிம்மதியை அளிக்கும். எண்ணிய காரியங்கள் முறையே நடக்கும்.

சகோதர, சகோதரிகளுக்கு இடையே ஒற்றுமை பலப் படும். தீராத கடன் மற்றும் குடும்பச் சண்டைகள் முடிவுக்கு வரும். பிரச்சினைகள் நீங்கி மகிழ்ச்சி உண்டாகும்.

பெண்களுக்கு: மனக்குழப்பத்திலிருந்து வெளிவருவீர்கள். சிந்தித்துச் செயல்படும் காலம் இது. காரிய வெற்றி கைகூடும். மனதில் நிம்மதி பிறக்கும். திருமண வாழ்வில் இருந்த கசப்புகள் விலகும். வேலைக்குப் போகும் பெண்களுக்கு நல்ல பணப்புழக்கம் ஏற்படும். பணியில் கடினநிலை மாறும்.

**மாணவர்கள்:** படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். பெண் குழந்தை களுக்குச் சிந்தனை வளம் அதிகரிக்கும். படிப்பிலும் போட்டிக ளிலும் கவனம் அதிகரிக்கும். தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவீர்கள். கனவுகள் நிறைவேறும்.


**உத்தியோகத்தர்கள்:** அரசு வேலையில் பணி மாற்றம் மற்றும் இடமாற்றம் எதிர்பார்த்தவர்களுக்கு, மாற்றங்கள் கிடைக்கும். தனியார் பணியில் இருப்பவர்களுக்குப் புதிய வாய்ப்புகள் தேடி வரும். பதவி மற்றும் சம்பள உயர்வு உண்டு.

**வியாபாரிகளுக்கு:** புதிய தொழில் தொடங்கும் முயற்சி, கூட்டுத் தொழில் முயற்சிகள் வெற்றி தரும். வியாபார விஸ்தரிப்பில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த கடன் உதவிகள் கிடைக்கும்.

**பரிகாரம்: சனிக்கிழமைகளில் கோயில்களுக்கு நல்லெண்ணெய் தானம் செய்யுங்கள். ஏகாதசி தினத்தில் பசுக்களுக்கு உணவு அளியுங்கள்; காரிய வெற்றி உண்டாகும்.**

# இன்றைய நாள்

## (ராசிபலன்)



**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாகும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் தகவல் கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத வாய்ப்புகள் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

~பொங்கலுக்கு லீவு வரும்னு பார்த்தா, பொங்கலே லீவுல தான் வருது




ஒரு வழியா ticket போட்டாச்சு..!!

~ வாரிசா... துணிவா மாப்ள..?

: படமா... பஸ் ticket மாமா... பொங்கலுக்கு ஊருக்கு போணும் ல...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பொறுப்புணர்வு தேவை

காலச்சூழல் தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டு தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, சிதைத்து சின்னாபின்னமாகியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதல் பிளவு 2010ஆம் ஆண்டு நடந்தபோதோ அதன் பின்னர் 2017ஆம் ஆண்டு இரண்டாவது பிளவு நடந்தபோதோ, கூட்டமைப்பு என்பது அழியாது இருந்தது. ஆனால் இன்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தனி வழியால் அந்தக் கூட்டமைப்புக்கு முடிவுரை எழுதப்பட்டு விட்டது. ஒரு வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இது வரை காலமும் அந்தக் கூட்டமைப்பைக் கட்டிக்காத்து வந்தது என்று கூடச் சொல்லலாம். அதை அவர்கள் தொடர்வதற்கு விரும்பவில்லை. அதனால்தான் 'தேர்தல் முறைமையின் தொழில்நுட்பக் காரணங்கள்' என்பதை முன்னிறுத்தி, தமது நீண்ட நாள் கனவை நிறைவேற்றியிருக்கின்றனர்.


இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்ற பெருவிருட்சத்தின் நிழலில்தான் பங்காளிக் கட்சிகள் குடிகொண்டு இருக்கின்றார்கள் என்று அந்தக் கட்சியின் பழம்பெரும் தூண்கள் தொடர்ச்சியாகக் கூறிவந்திருக்கின்றார்கள். இப்போது அதைச் சவாலுக்கு உட்படுத்தி நிரூபிக்க முயல்கின்றார்கள். பங்காளிகளை வெளியேற்றி தாம் தனித்துக் களமிறங்கி இந்த விஷப்பரீட்சையில் வெல்ல முடியும் என்று நம்புகிறார்கள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இந்த முடிவால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இறுதிவரை இருந்த இரு பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும், கூட்டமைப்பிலிருந்து முன்னர் வெளியேற்றப்பட்ட – வெளியேறியவர்களுடன் கூட்டு அமைத்துள்ளார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தங்கள் தலைவர்கள் ஒற்றுமையாக– ஓரணியில்– பயணிக்கவேண்டும் என்றே விரும்புகிறார்கள். அந்தப் பேராசையை இப்போது பூர்த்தி செய்யும் வகையில் இந்தக் கூட்டு மலர்ந்து வருகின்றது. ஆனாலும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நாட்டாமை செலுத்தி அந்தக் கூட்டைச் சேதாரமாக்கியதோ அதே வேலையை புதிய கூட்டும் செய்யக்கூடாது என்பதுதான் மக்களின் இன்றைய எதிர்பார்ப்பு. ஒரு கூட்டு உருவாக்கப்படும்போது பல கட்சிகளின் ஒன்றிணைவு இருக்கும். அந்தக் கூட்டில் நான் பெரிது, நீ பெரிது என்று அதிகாரத்தை தக்கவைக்க கட்சிகள் முட்டிக்கொண்டால் ஐக்கியம் என்பது காணாமற்போய்விடும். எல்லோரும் சமம் என்ற மனநிலையிலேயே அரசியல் கூட்டை உருவாக்கிக் கொள்ளவேண்டிய தேவை இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்படும் போது அந்த நிலைமை காணப்பட்டாலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைதிக்குப் பின்னர் அது தலைகீழாக மாறியதாலேயே கூட்டமைப்பு உடைந்தது.

இதேபோன்றதொரு செயற்பாட்டை இப்போது கூட்டை உருவாக்க முயலும், தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன செய்யக்கூடாது. விட்டுக்கொடுப்புடன் விடயங்களை அணுகவேண்டிய தேவை இருக்கின்றது. தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் தலைமையில் இந்த ஒன்றிணைவுக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், அவரின் ஆளுமை தொடர்பிலான பல்வேறு கேள்விகள் இன்றுவரையில் இருக்கவே செய்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆதிக்கம் போன்றே, விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் ஆதிக்கம் செலுத்தினார் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கடந்த பொதுத் தேர்தல்காலத்தில் குற்றம்சுமத்தியமை நினைவிருக்கலாம். இதே சாரப்பட ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவர் திருமதி அனந்தி சசிதரனும் குறிப்பிட்டிருந்தார். எனவே இப்போது காலம் நெட்டித்தள்ளி உருவாகும் இந்தக் கூட்டணியில் அவ்வாறான நிலைப்பாடுகளை முன்நகர்த்தாது இனியாவது முதிர்ந்த அரசியல்வாதியாக அவர் செயலாற்றினால் காலம் மீண்டும் அவருக்கு கொடுத்துள்ள வாய்ப்பை தக்க வைத்துக்கொள்ளலாம்.

நாளொரு நல்வார்த்தை

"நான் என் வலியை பொறுமை எனும் வயலில் விதைத்த போது அது மகிழ்ச்சி எனும் பழத்தைத் தந்தது" – கலீல் ஜிப்ரான்




# தமிழரசுக் கட்சி வெளியேறியதால் கூட்டமைப்புப் பலமடைகிறது

## செல்வம் எம்.பி. கூறுகின்றார்

வவுனியா, ஜன.13

இலங்கைத் தமிழரசுக் கட்சி வெளியேறினாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியவர்கள் பலர் மீள இணைந்துள்ளமையால் இந்தக் கூட்டு பலமடைந்துள்ளது. கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்தக் கூட்டில் இணைய வேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம் எப்படி என்பது உங்களுக்குத் தெரியும். இறுதியாக மூன்று கட்சிகள் கூட்டமைப்பில் இணைந்து பயணித்தன. எங்களைப் பொறுத்தமட்டில் நானும், சித்தார்த்தன் அவர்களும் கட்சி ரீதியாக தமிழரசுக் கட்சிக்கு கடிதம் எழுதினோம். ஏனைய கட்சிகளையும் அரவணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தி, அதனூடாக நாங்கள் எல்லோருக்கும் வலுவாக ஒற்றுமையாக இருப்பதாக காட்ட முடியும். மக்களது அபிலாஷைகளை வென்றெடுக்க முடியும்.

ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளையும் உள்ளெடுப்பது தொடர்பாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பேசினோம். கடிதமும் எழுதினோம். ஆனால், அந்தக் கடிதத்துக்கான பதில் வருவதற்கு முன்னர் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுகின்ற முடிவை எடுத்தது. கூட்டமைப்பில் இருந்து வெளியே சென்ற கட்சிகளில் உள்ளே வர வேண்டும் என கருதி அனைத்துக் கட்சிகளையும் இணைத்துள்ளோம். கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் எமது கூட்டில் இணையவேண்டும் என வேண்டுகோள் விடுகின்றேன். தமிழ் மக்களின் பிரச்சினையை வென்றுறெடுப்பதற்கு நாங்கள் பலமான கூட்டாக ஒற்றுமையாக பயணிக்க வேண்டும்.

தனிப்பட்ட கட்சிகளுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டுக் கொடுக்கமுடியாது. மக்கள் ஒற்றுமையைத் தான் விரும்புகிறார்கள். அவர்கள் தங்களது தனித்துவத்தைக் காட்ட வேண்டும் என நினைக்கிறார்களா எனத் தெரியவில்லை. மக்கள் எமது பக்கம் இருப்பார்கள். மக்களது நலனை முன்னிறுத்தி கட்டுக்கோப்பாக செயற்பட வேண்டும். அதற்கு கூட்டமைப்பு பதிவு செய்யப்படும். பொதுச் சின்னம் தெரிவு செய்யப்படும் – என்றார். (எ-இ)

# புதிய கூட்டணி சவாலில்லை

ஹெலிகொப்டர் கூட்டணியால் எங்களுக்கு எவ்வித சவாலும் கிடையாது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை இலக்கு வைத்து 12 அரசியல் கட்சிகளின் பங்களிப்புடன் 'சுதந்திர மக்கள் கூட்டணி' எனும் பெயரில் புதியதொரு அரசியல் கூட்டணி உதயமாகியுள்ளது.

"பதவிகளுக்காகவும், தலைமைத்துவத்துக்காகவும் சண்டையிடுபவர்களே புதிய கூட்டணியில் உள்ளனர். அதனால்தான் தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்யாமல், தலைமைத்துவ சபையை நியமித்துள்ளனர்" என மொட்டு கட்சிச் செயலர் சாகர காரியவசம் குறிப்பிட்டார். (ஓ-44)

நாளை

14.01.2023
சனிக்கிழமை
மார்கழி 30

சுபநேரம் : 03.34 - 05.04
ராகுகாலம் : 09.34 - 11.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னீர் வளத்தைப் பாதுகாக்க ஓரணியில் ஒன்றுபட வேண்டும்

## சூழலியல் செயற்பாட்டாளர் பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் நன்னீர் அளவு பெருகிவருகின்ற நிலையில், தனியே நீர்பாசனத் திணைக்களத்தால் மாத்திரம் அதனை முழுமைபெறச் செய்யமுடியாது. மாறாக அனைத்துத் திணைக்களங்களும் இணைந்து செயற்பட்டாலே குடாநாட்டின் நன்னீர் வளத்தை தொடர்ச்சியாக பாதுகாக்கலாம் என தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் செயலாளர் நாயகம் பொ.ஐங்கரநேசன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீர்ப்பாசனத் திணைக்களம் குடாநாட்டில் நீர் வளத்தை பேணுவதற்கு உரிய முக்கியத்துவத்தை கொடுத்து அதற்கான திட்டங்களை வகுத்து வந்தாலும்கூட அதனைப் புரிந்து கொண்டு நடைமுறைப் படுத்துவதற்குரிய பக்குவம் அல்லது புரிந்துகொண்டு நடைமுறைப்படுத்துவதற்குரிய செயற்பாடுகள் ஏனைய திணைக்களங்களிடம் இல்லை என்றுதான் சொல்லலாம். இங்கே வீடமைப்பு திட்டங்கள் என்பது அரசியல்வாதிகளை திருப்திப்படுத்துவதற்காக உருவாக்கப்படுகின்றன. அவர்களுடைய வாக்கு வங்கியை கருத்தில் கொண்டு கொண்டுவரப்படுகின்றன. ஆகவே அதற்கு பணிந்து போகின்ற திணைக்களத் தலைவர்கள் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் உள்வாங்காது இந்தத் திட்டங்களை வந்துநின்று நடத்துகின்றார்கள்.

தொண்டைமானாற்றில் ஒரு அடி வெள்ளம் இருக்கின்ற பொழுது வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது என்று சொல்லிச் சொன்னால் அது தடுப்பணை திறந்து விடாதது காரணம் அல்ல. நான்கு அடி வரை நீரைத் தேக்கிவைக்கும் அளவுக்குத் தான் அந்தத் திட்டமே உருவாக்கப்பட்டது. முன்பாகவே அந்த நீர் வந்து வெளிச் செல்லுகின்றது என்றால் அதற்கான காரணம் என்பது வேறு. மேலும் மிகமிக உயரமாக அதாவது நீரோட்டத்தை நீரின் திசையில் செல்லவிடாது அமைக்கப்பட்ட புகையிரத பாதைகள் வீதிகள் கால்வாய்கள் கால்வாய்களுக்கு மேலாக கட்டப்பட்ட கட்டுமானங்கள் இவைகள் எல்லாம்தான் இதற்கான காரணங்களாக காணப்பட்டு விளைவுகளாகத் தென்படுகின்றன.

வடக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களம் தேசப்பற்று மிக்க நல்ல பொறியியலாளர்களை, இந்த மண்ணின் மீது பற்றுள்ள பொறியியலாளர்களை கொண்டிருக்கின்றது. பொறியியல் சார்ந்து பொறியியலாளர்கள் துறைசார்ந்த அறிவையும் பெற்றிருக்கின்றார்கள். ஆகவே ஏனைய திணைக்களத்தினர் தங்களுடைய துறை சார்ந்த அனுபவங்களை பெற்றிருக்கலாம். இந்த பொறியியலாளர்களுடைய ஆலோசனையைப் பெற்றுத்தான் தங்களுடைய அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்பவர்களாயினும் தங்களுடைய திட்டங்களை முன்னெடுக்கவேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் நன்னீருக்கு மிகப்பெரிய பிரச்சினையை இந்த மண்ணில் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் - என்றார். (ம-125)

தென்மராட்சியில்

## 9 பாடசாலைகளுக்கு அதிபர்கள் இல்லை!

சாவகச்சேரி, ஜன.13

தென்மராட்சி கல்வி வலயத்தில் ஒரே நேரத்தில் ஒன்பது பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இந்தப் பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் நியமிக்கப்படும்வரை அங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள் பதில் அதிபர்களாக கடமையாற்றுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

60 வயதுடன் ஓய்வுபெறும் திட்டத்தில் நான்கு அதிபர்கள் ஓய்வு பெற்றுள்ளமையாலும், ஐந்து அதிபர்கள் வலயம் ஏனைய பாடசாலைகளுக்கு இடமாற்றல் பெற்றுச் சென்றுள்ளதாலும் இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய அதிபர் கு.இரவீந்திரா பளை மத்திய கல்லூரிக்கும், மிருசுவில் அ.த.க.பாடசாலை அதிபர் க.கஜேந்திரன் இயக்கச்சி அ.த.க.பாடசாலைக்கும், மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர் ஐ.தேவராஜன் கச்சாய் மகா வித்தியாலயத்துக்கும், மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய அதிபர் திருமதி தயாசக்தி பாலசுப்பிரமணியம் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கும், சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை அதிபர் திருமதி தர்சினி வசந்தமாறன் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்துக்கும், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம் எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயத்துக்கும் இடமாற்றலாகிச் சென்றுள்ளனர்.

அதேநேரம் கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம், சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம், சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயம் ஆகிய வற்றிலும் அதிபர் பதவி வெற்றிடமாகியுள்ளது.

சில பாடசாலைகளுக்கு கல்வி வலயமும் சில பாடசாலைகளுக்கு மாகாண கல்வித் திணைக்களமும் விண்ணப்பங்கள் கோரி புதிய அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (ஏ-9)

## வாள்வெட்டில் ஒருவர் காயம்

கொழும்பு, ஜன. 13

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலங்காடு பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் குலசிங்கம் சூரியகுமார் என்பவர் காயமடைந்தார் என்று உதயனின் கடந்த 9ஆம் திகதிய பதிப்பில் செய்தி வெளியாகியிருந்தது.

குறித்த சம்பவத்தில் தவபாலச்செல்வன் டிலக்சன் (வயது 22) என்பவரே காயமடைந்த நிலையில் பிறிதொருவரின் பெயர் தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது. காயமடைந்த மேற்படி நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார். பொலிஸாரின் முதல் கட்ட விசாரணையில் வழங்கப்பட்ட முரணான தகவல்களை அடுத்தே மேற்படி பெயர் மாற்றம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-125)

ப. நோ. கூ. சங்கங்களால்

## நியாயவிலையில் பொங்கல் பொதி

யாழ்ப்பாணம், ஜன. 13

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 'கோப்சிற்றி' விற்பனை நிலையத்தினூடாக பொங்கல் பொதிகள் நியாய விலையில் விநியோகிக்கப்படவுள்ளன.

பொங்கல் பானை, அகப்பை மற்றும் பொங்கலுக்கான பொருள்கள் அடங்கிய பொதி ஆகியவையே இவ்வாறு விநியோகிக்கப்படவுள்ளன என சங்கத்தின் முகாமையாளர் எஸ்.தேவக்குமார் தெரிவித்தார்.

இதேவேளை வேறு சில கூட்டுறவு சங்கங்களும் கிளை விற்பனை நிலையங்கள் ஊடாகவும் தைத்திருநாளை முன்னிட்டு நுகர்வோருக்கு பொங்கல் பொருள்களை நியாய விலையில் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## பல்கலை மாணவர்களின் மூன்றாம் ஆண்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 13

லண்டனிலுள்ள ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் பங்களிப்பில் பணஉதவி பெற்றுவரும் பல்கலைக்கழக மாணவர்களின் மூன்றாம் ஆண்டு நிகழ்வு யாழ்.விசன் இந்துமன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் திங்கட்கிழமை கொக்குவிலிலுள்ள அன்பகம் ஆன்மிக நிலையத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.விசன் இந்துமன்றத் தலைவர் க.சசீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வடக்கு மாகாண எதிர்க்கட்சி முன்னாள் தலைவர் சின்னத்துரை தவராசா, யாழ்ப்பாண மேலதிக மாவட்டச் செயலர் ச.முரளிதரன், நல்லூர் பிரதேச செயலர் அ.எழிலரசி, முன்னாள் யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகம், யாழ்.மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு இணைப்பாளர் க.மனோகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இதன்போது பல்கலைக்கழக மாணவர்களுக்கு தைப்பொங்கல் விசேட ஊக்குவிப்புத் தொகையாக 10ஆயிரம் ரூபா காசோலை வழங்கப்படவுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோயா, பீன்ஸ் பயிரிடல் கிளிநொச்சியில் ஆரம்பம்

மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 13

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த வருடம் சோயா, பீன்ஸ் ஆகிய குறுங்கால பயிர்ச்செய்கைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன என கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஜெகதீஸ்வரி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் சோயா உற்பத்தி தற்போது அறிமுகப்படுத் தப்படவுள்ளது.

இதற்கென மாவட்டத்தில் நான்கு விவசாயிகள் இதற்குத் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மாதிரி முறையில் செய்கையை முன் னெடுக்க அரைக் கிலோ விதை வழங்கப்படவுள்ளது.

இந்த உற்பத்திகள் மூலம் விவ சாயிகள் சிறந்த பயனை அடைய முடிவதுடன் குறைந்த வருமா னம் பெறுவோர் தன்னிறைவு உணவை பெற வழிவகுக்கும்.

இதேவேளை கிளிநொச்சி மாவட் டத்தில் குரக்கன் பயிர்ச்செய்கைக் கான குரக்கன் விதை விநியோக மும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் சுமார் 350 விவசாயிகள் குரக்கன் விதையைப் பெற்று பயிர்ச்செய் கைக்கு தயாராகியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)

## மது அருந்திய இளைஞர்கள் வீதியோரங்களில் அடாவடி

நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி, ஜன. 13

ஒழுங்கைகள் மற்றும் வீதியோரங்களில் இளை ஞர்கள் மது அருந்தி விட்டு தகாதவார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி மக்களைத் துன்புறுத்தி அடாவடித்தனம் செய்கின்றனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நாவற்குழி ஜே/295 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சில குறிப்பிட்ட இளைஞர்கள், ஜே/294 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ஒழுங்கைகள் மற்றும் வீதியோரங்களில் மது அருந்தி அந்த வழியால் செல்லும் மக்களைத் தகாத வார்த் தைகளால் பேசித் துன்புறுத்துகின்றனர். அத் துடன் மக்களின் காணி உறுதிகளை வழங்கு மாறும் தொந்தரவு செய்கின்றனர்.

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பகல் நேரத்திலும் மற்றைய தினங்களில் இரவு வேளைகளிலும் போதையில் நின்று தொல்லை செய்கின்றனர்.

இதனால் அவ்வழியில் செல்லும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, இளைஞர்களின் செயற்பாட்டுக்கு உரிய அதிகாரிகள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (ஒ-14-159)

## மன்னாரில் 326 ஹெக்ரேயரில் உளுந்துப் பயிர்ச்செய்கை

மன்னார், ஜன. 13

மன்னார் மாவட்டத்தில் மழைவீழ்ச்சி குறைவாக கிடைக்கப்பெற்ற போதிலும் உளுந்து பயிர்ச்செய்கையில் அதிகள வான விவசாயிகள் ஆர்வம் காட்டியுள் ளனர் என மன்னர் மாவட்ட உதவி விவ சாயப் பணிப்பாளர் க.மதனராஜ்குலாஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் உளுந்து பயிர்ச் செய்கை 326 ஹெக்ரேயரில் மேற்கொள் ளப்படுகிறது.

850 விவசாயிகளால் சிறப்பான முறை யில் இந்தப் பயிர்ச்செய்கை முன்னெ டுக்கப்படுகிறது. இதன் மூலம் உள்ளூர் விவசாயிகளை பலப்படுத்த முடிவதுடன் பொருளாதாரத்தையும் புத்தெழுச்சி பெறவைக்க முடியும்.

இதேவேளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் பயறு உற்பத்தி மேற்கொள்ளப் படவுள்ளது. இதற்கான விதை விநியோ கம் மன்னார் மாவட்டச் செயலகத்தால் இடம்பெற்று வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)

## தேவையுடைய தரப்புக்களுக்கு குடிதண்ணீரில் விலைக்கழிவு!

காரைநகர் சபையில் தீர்மானம்

காரைநகர் பிரதேசசபையின் ஆளுகைக் குட்பட்ட பகுதியில் பெண் தலைமைத்துவ மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு குடிதண் ணீர் விநியோகத்தில் விலைக்கழிவு வழங்க காரைநகர் பிரதேசசபையில் தீர்மானம் எடுக் கப்பட்டுள்ளது.

சபை தவிசாளர் கணேசபிள்ளை பாலச் சந்திரன் தலைமையில் பிரதேசசபையின் அமர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பொதுமக்களுக்கு விநியோகிக் கப்படும் குடிதண்ணீர் ஒரு லீற்றர் ஒரு ரூபா 30 சதத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது.

பெண் தலைமைத்துவ மற்றும் மாற்றுத் திறனாளிகளின் பொருண்மிய நலிவை கருத்திற்கொண்டு அவர்களுக்கு ஒரு லீற்றர் குடிதண்ணீரை 65 சதத்துக்கு வழங்க தவி சாளரால் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

சபை உறுப்பினர்கள் ஆதரவளித்த நிலையில் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ச-125)

## புலமைப்பரிசில் பெறுபேறு இந்த மாதம் வெளியாகும்!

பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 13

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை இம்மாதத் துக்குள் வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணி தற் போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

எதிர்வரும் இரு தினங்களுள் அந்தப் பணிகள் நிறைவுறும்.

அதன்பிரகாரம் இம்மாதத்துக்குள் பெறுபேறுகள் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது எனப் பரீட்சை கள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டது. (ச-இ)

## சுகாதார வசதிகள் இன்றி பொருளாதார நிலையம்

கனகபுரம் வியாபாரிகள் விசனம்

கிளிநொச்சி கனகபுரம் பகு தியில் அமைக்கப்பட்டுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையம் சுகாதார சீர்கேடு களுடன் அத்தியாவசிய வசதி களின்றி காணப்படுகின்றது என வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக் கையில்,


இந்த பொருளாதார மத்திய நிலையத்தில் 40க்கும் மேற் பட்ட வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலை யில் தற்போது 5 வர்த்தக நிலையங்களே பயன்பாட்டில் உள்ளன.

பிரதான நுழைவாயிலின் இரு மருங்கிலும் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளதுடன் கால்நடைகளின் எச் சங்களும் கொட்டப்பட்டு அகற்றப்படாதால் துர் நாற்றம் வீசுகின்றது.

இதனால் நுகர்வோரும் வியாபாரிகளும் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

அத்துடன் இங்கு அமைக்கப்பட்டுள்ள பொதுமலசல கூடப் பகு தியும் பற்றைக்காடாக காணப்படுகிறது. நாளாந்த குடிதண்ணீர் வசதிகளும் இன் றியுள்ளது.

இந்தநிலை தொடருமானால்



நோய்த்தொற்றுகளுக்கு நாம் ஆளாக நேரிடும் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இதுகுறித்து சம்பந் தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்தி எமது வியாபார நடவ டிக்கையை சிறப்பாக முன்னெ டுக்க வழிவகுக்க வேண்டும் என அவர்கள் குறிப்பிட்டனர். (ச-113)

## கொடுப்பனவை பெற்றுக்கொள்க

யாழ்ப்பாணம் - கொக்கு வில் தபால் அலுவலகத்தில் பொதுசன மாதாந்த ஓய்வூ தியக் கொடுப்பனவு, நோயா ளர் கொடுப்பனவு என்பன வழங்கப்படுகின்றன.

கொடுப்பனவுகளை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழ மைக்கு முன்னர் உரியவர் கள் நேரடியாக வருகை தந்து பெற்றுக் கொள்ளு மாறு கொக்குவில் தபால் அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் விவசாய ஓய்வூ தியம் வழங்கப்படும் நிலை யில் அதற்கான கொடுப் பனவையும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் உரியவர்கள் வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார். (ஒ-14-66)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 22.04.1941 மறைவு 14.12.2022

கடந்த 14.12.2022 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் திருநாவுக்கரசு செல்வராணி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (11.01.2023) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (13.01.2023) வெள்ளிக்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


"இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்"

குடும்பத்தினர்.

1/5, மடம் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 10 . 1942



மறைவு 12 . 01 . 2023

### திரு. சுந்தரம் டிவகலாலா

வட, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளரும் தன் வாழ் நாட்களை பொது சேவைக்காக அர்ப்பணித்தவரும் இலங்கை பொதுச்சேவை அதிகாரியுமான யாழ். இந்துவின் மைந்தன் பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய **திரு.சுந்தரம் டிவகலாலா** ஜனவரி 12ஆம் திகதி மனைவி, பிள்ளைகள் அனைவரையும் தன் அருகில் அழைத்து பிரியாவிடை கொடுத்து இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (14.01.2023) சனிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் 127, வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

**127, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 09.11.1969 இறைவன் அடியில் 11.01.2023

### திருமதி அருள்மொழி கதிர்காமதர்ஷன்

(முன்னாள் ஆசிரியர் – கொழும்பு சைவமங்கையர் வித்தியாலயம், யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி, முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு)

திருமதி அருள்மொழி கதிர்காமதர்ஷன் 11.01.2023 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் கோண்டாவிலைச் சேர்ந்த தர்மலிங்கம் - புஸ்பராணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், கதிர்காமதர்ஷனின் அன்பு மனைவியும், விகாஷினி, திருக்குமரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தேன்மொழி, கனிமொழி, தர்மினி, ரேவதி, வாணி ஆகியோரின் மூத்த சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இலக்கம் 188, பொற்பதி வீதி, கோண்டாவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 222 6412**

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 03 . 1940



இறப்பு 12 . 01 . 2023

### சோமசுந்தரம் இராசலட்சுமி

எழுதுமட்டுவாளை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் இராசலட்சுமி அவர்கள் நேற்று (12.01.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் கனகமணி, தங்கலட்சுமி, பரமேஸ்வரன், பரமேஸ்வரி, முத்துத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஈஸ்வரசோதி, சறோஜா (ஓய்வு பெற்ற தாதியர் - வரணி), செல்வரட்ணம் (பொறுப்பு தாதி உத்தியோகத்தர்-யாழ். போதனா வைத்தியசாலை), அரியரட்ணம் (இலங்கை மின்சார சபை, ஒப்பந்தகாரர் - சுன்னாகம்), விஜிதா, சுபிதா, விஜயரட்ணம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமிர்தலிங்கம் (இலங்கை மின்சாரசபை ஒப்பந்தகாரர்), துரைராஜசிங்கம், கமலேஸ்வரி (ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர்), குமுதினி (சமுர்த்தி முகாமையாளர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), சிறீஸ்வரன், சதீஸ் குமார், நித்தியா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் அஜந்தன், றெயிந்தன் (அவுஸ்திரேலியா), காயத்திரி (ஆசிரியை), ரிஷிகேசன், மளவிகா, அட்சகி, தனுசன், மதுசா, அஸ்விகா, அக்ஷா, அபிரா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஜந் (அவுஸ்திரேலியா), அட்மிகா, ஆரிஸ் (அவுஸ்திரேலியா) ஆகி யோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


**சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (வடலி ரெஸ்ரோரன்ட் அருகாமை)**

**தகவல்: குடும்பத்தினர். தொ.பே:076 617 1620**

(CS 22802) 1/6

## மரண அறிவித்தல்

மண்ணில் 11 - 06 - 1936



விண்ணில் 08 - 01 - 2023

### சரவணமுத்து சுப்பிரமணியம்

இலங்கையில் ஆத்தியடி பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் மெல்பேன் அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுப்பிரமணியம் அவர்கள் கடந்த (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சிவகாமசுந்தரியின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரபாலசூரியர் செல்வமணியின் மூத்தமருமகனும் காலஞ்சென்ற கலாவதியின் அன்புக் கணவனும், சுந்தரவதனி (டென்மார்க்), சுந்தரேசன் (இங்கிலாந்து), செல்வகௌரி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவானந்தன் (டென்மார்க்), பாஸ்கரன் (அவுஸ்ரேலியா), பவானி (இங்கி லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், பவதாரணி, பவகாருணி, பவசங்கரன், ஆதித்யா, ஆரியா, அகத்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும், அமிரா லஷ்மி, ஆரியன் ராஜ், அஷ்மிகா ராணி ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்ற சோமசுந்தரம், இராஜேஸ்வரி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற மங்களேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுப்ரமணியம், நவபாலசூரியர், அமிர்தவல்லி, சிவபாலசூரியர், காலஞ்சென்ற சாந்தவதி, குகபாலசூரியர், சஷிபாலசூரியர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 15.01.2023 ஞாயிற்றுக்கிழமை 11.00 மணிக்கு BOYD Chapel, Springvale Cemetery, 600 Princes HWY, Springvale இல் நடைபெறும். அதனை தொடர்ந்து 13:00 - 13:15 க்கு தகனம் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 39025) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதிய...

க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ, த.சித்தார்த்தன் தலைமையிலானபுளொட், சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ், ஸ்ரீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசிய கட்சி என்பன புதிய கூட்டணியாக உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளன.

மேலும் யாழ். மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையிலான அணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி உள்ளிட்ட மேலும் சில தரப்புகள் ஒன்றாகப் போட்டியிட இணக்கம் கண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஆனாலும் கட்சிகளுக்கிடையேபொதுச் சின்னம் ஒன்றைக் கொண்டுவந்து உடன்பாட்டைஏற்படுத்துவதில் உள்ள தாமதம் காரணமாக கூட்டணி அறிவிப்பு தாமதமாகி வருகின்றது. இந்தப் பின்னணியிலேயே அது தொடர்பிலும், ஆசனப்பங்கீடுகள் தொடர்பிலும் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், வி.மணிவண்ணன், க.சர்வேஸ்வரன், குருசாமி சுரேந்திரன், விந்தன் கனகரட்ணம், சபா.குகதாஸ் உள்ளிட்டோரும், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பிரதிநிதிகள் அடங்கிய 25 பேர் வரையானோரும் குறித்த கலந்துரையாடலில் பங்கேற்றனர். (அ-ம-20)

### மாங்குளத்தில்...

மோதி விபத்துக்குள்ளானது. இதையடுத்து கப் ரக வாகனத்தில் பயணித்த சாரதியும், உதவியாளரும் படுகாயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். அவர்களில் உதவியாளரான ரமேஷ்வரனே உயிரிழந்தார். விபத்துத் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-113)

### ராஜபக்சக்களை...

தலைவரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கி நாட்டு மக்களையெல்லாம் பஞ்சத்துக்குள் தள்ளிவிட்டு, மக்களுக்குள்ள ஜனநாயக உரிமையையும் அரசாங்கம் இன்று பறித்தெடுக்க முயல்கின்றது. தேர்தலுக்கான நடவடிக்கைகளை பிற்போடுவதன் மூலம் இந்த வங்குரோத்து அரசியலை முன்னெடுக்க அரசாங்கம் சதி செய்கின்றது.

பயங்கரவாதச் சட்டம் இந்த நாட்டிலே உருவாக்கப்பட்டதன் நோக்கம்மாறி, அரசியல் நோக்கங்களுக்காக, சுயநலன்களுக்காக, தங்களுக்கு விருப்பம் இல்லாதவர்களை அச்சுறுத்துவதற்காக அந்தச் சட்டம் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே அந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதிலே நாங்கள் உறுதியாக இருக்கிறோம். நாட்டுக்குத் தேவையான சட்டங்களை வகுக்கின்றபோது நாட்டின் நலனை மையமாக வைத்து அது உருவாக்கப்படவேண்டும்.


கோத்தாபய ராஜபக்ச மன்னிக்கப்பட முடியாத ஒருவர். தான் ஜனாதிபதியாக இருந்த குறுகிய காலத்துக்குள்ளே நாட்டிலே இனவாத, மதவாத பரப்புரைகளை முன்னெடுத்து இந்த நாடு அழிவுப்பாதையில் பயணிக்கக் காரணகர்த்தாவாக அமைந்தார். எனவே அவருக்குரிய தண்டனையை இந்த நாட்டிலே வழங்க வேண்டும். அவரை கனடா மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்தும் நிராகரிக்க வேண்டும் - என்றார். (அ-ம)

### பெயர்,...

நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் உடன்பாடுகள் எட்டப்படாத நிலையில், பொதுச்சின்னம் மற்றும் கூட்டணி தொடர்பில் இறுதிக்கட்டப் பேச்சு இன்று இடம் பெறும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான ஒப்பந்தம் நாளை கைச்சாத்தாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-20)

---

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**இதயதீபம் கலாநிதி**

**V. சரவணமுத்து சிவலிங்கம்**

மலர்வு : 16.02.1951 உதிர்வு : 03.01.2013

அன்பின் உருவமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
விளங்கிய எங்கள் குடும்ப தலைவரே!
உங்களை நினைக்காத நாளே இல்லை
உங்கள் வழிகாட்டலில் நினைவலைகள்
சுமந்து பயணிக்கின்றோம்.

**ஓம் சிவாய சிவாய... சிவாய...**


நெஞ்சில் வலிகளுடனும் நீங்காத நினைவலைகளுடனும்
மனைவி காந்தி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(CR 3961/7K3/6)

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 05 . 1945



மறைவு 11 . 01 . 2023

## இரத்தினம் பரராஜசிங்கம்

வராஹி அம்மன் கோவில் வீதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் பரராஜசிங்கம் நேற்றுமுன்தினம் (11.01.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - புவனேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் மருமகனும், சிவஞானமலரின் அன்புக் கணவரும், தவராணி, யோகராணி, ஜெயராணி, மனோராணி, தனபாலசிங்கம், ஸ்ரீகாந்தன், காலஞ்சென்ற குணபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிவராஜசிங்கம், ஜீவா, காலஞ்சென்றவர்களான தர்மினி, ஷைலா மற்றும் விஜயதாரணி, ராஜ்மோகன், நிரஞ்சன், சஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தி, யசோதாஸ், உதயகுமார், துவாரகா, விஜயதர்சிகா, காலஞ்சென்ற ஜெயகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுஜா, சிந்துஜா, சங்கீர்த், சரண்ஜா, தர்சிகா, ரதீஸ், ரம்மியா, ஜஸ்வின், தியானா, கவின், தாருஸ், தன்விகா, தேனுஜா, சோபியா, நினிகா, நிஸ்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
தொடர்பு:- 076 082 8019 குடும்பத்தினர்.

(CS2279/04/6)

---



## குழந்தை இயேசு ஆலய திருவிழா புதுக்குடியிருப்பு - 15.01.2023

* நற்கருணைத் திருவிழா
  14.01.2023 மாலை 5.00 மணி
* திருநாள் திருப்பலி
  15.01.2023 காலை 7.00 மணி

அற்புத குழந்தை இயேசுவின் ஆசீர்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பரிபாலகர்
குழந்தை இயேசு ஆலயம்
மு/புதுக்குடியிருப்பு.

(CS 2280/4) 1-6

---

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 25 . 07 . 1995



இறப்பு 11 . 01 . 2023

எமது பாடசாலையின் சிரேஸ்ட ஆசிரியர்
திருமதி திருநிலைநாயகி ரகுநாதன் அவர்களின் அன்பு மகன்

## ரகுநாதன் விதுஷன்

அவர்கள் கடந்த (11.01.2023) புதன்கிழமை அகாலமரணம் அடைந்து விட்டார். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்,
யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை

---

**The Royal College Of Jaffna**

தனியார் கல்வி நிலையம் -
பிரான்பற்று வீதி, சங்கானை.
சிங்கள மொழி கற்பிப்பதற்கு அனுபவம் மிக்க பகுதி நேர ஆசிரியர் தேவை.
Tel:- 077 675 1649

(CS 2278/1) 1-6

**விற்பனைக்கு**

நல்ல நிலையில்
உள்ள
யப்பான் சுப்பர் கப் 50CC

தொடர்பு
077 9420 568

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாகவத படன வாசிப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

ஸ்ரீமத் பாகவத படன வாசிப்புக் கடந்த சனிக்கிழமை சேர்.பொன்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தில் ஆரம்பமானது.

கடந்த திங்கட்கிழமை மூன்றாவது நாளாகவும் ஸ்ரீமத் பாகவத படன வாசிப்பு முன்னெடுக்கப்பட்டது.

எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை காலை 9 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை ஸ்ரீமத் பாகவத படன வாசிப்புத் தொடர்ந்தும் ஏழு தினங்கள் நடைபெற ஏற்பாடாகி உள்ளது என்று யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தினர் தெரிவித்தனர். (எ-66)



# செஞ்சிலுவைச் சங்கத்தால் அவசர உதவி கையளிப்பு

கிளிநொச்சி, ஜன. 13

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் 500 குடும்பங்களுக்கு அவசர உதவி வழங்கும் செயற்றிட்டம் நேற்று முதற்கட்டமாக கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

கரைச்சிப் பிரதேச செயலாளர் ஜெயகரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போதுதெரிவு செய்யப்பட்ட 150 குடும்பங்களுக்கு 18 ஆயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர்கள் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சிறிமோகனன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி கிளை தலைவர் சேதுபதி, செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ச-113)



தேசிய மட்ட அழகியல் போட்டியில் தனி நடனத்தில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலய மாணவி தர்சனா ஜிசுபன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். மாணவ குழு இசைப் போட்டியிலும் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது. (ச-63)



சாவகச்சேரி பொதுச் சந்தை குபேர கணபதி கோயிலில் சங்கு முழுக்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் மற்றும் சந்தை வியாபாரிகள் ஆகியோரின் பங்களிப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய-9)



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் கடந்த வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் நாவற்குளி மகா வித்தியாலயத்துக்கு மடிக்கணினியும், மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்துக்கு 2 உருக்கு அலுமாரிகளும், கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலைக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான கணினிகளும் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேசசெயலர் உஷா சுபலிங்கத்தால் கையளிக்கப்பட்டன. (ய- 9)




சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயத்தின் 28 ஆவது நினைவு தின நிகழ்வுகள் மன்ற மண்டபத்தில் தலைவர் க.சிவநிதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ய-9)

# ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு மருந்துப் பொருள்கள்

கொழும்பு, ஜன.13

சந்திநிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைக்கு 7 லட்சத்து 52 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

தற்போது நிலவும் மருந்துப் பொருள்களுக்கான பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மருத்துவமனை விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த மருந்துப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் மருந்துப் பொருள்களை மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளித்தார். (எ-66,159)




யாழ்ப்பாணம், குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது. (ய-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் பொது நூலகத்துக்கு விவசாய நூல்கள் கையளிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 13

“இயற்கை விவசாய வாரம் 2023”ஐ முன்னிட்டு 'புதிய வெளிச்சம்' அமைப்பால் வலி. தெற்குப் பிரதேசசபைக்குட்பட்ட சுன்னாகம் பொது நூலகத்துக்கு இயற்கைவிவசாயம்சார்நூல்கள்கடந்த செவ்வாய்க்கிழமைகையளிக்கப்பட்டன. 'புதிய வெளிச்சம்' அமைப்பின் அமைப்பாளர்அனந்தராஜ்நவஜீவனின்ஏற்பாட்டில் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த இயற்கை வேளாண் விஞ்ஞானிகள் பாமயன்மற்றும்சுந்தரராமன்ஆகியோர் முன்னிலையில், 'புதிய வெளிச்சம்' அமைப்பால்கையளிக்கப்பட்டஇயற்கை விவசாய நூல்களின் தொகுதியை வலி. தெற்குப்பிரதேசசபைத்தவிசாளர்க.சுதர்ஷன் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். (ஒ-14-66)



அநுராதபுரத்தில் அண்மையில் இடம்பெற்ற தேசிய மட்டப் போட்டிகளில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவ, மாணவிகள் பல போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர். வாத்தியப் போட்டியில் செல்வன் சி.மயூரிகன் முதலாம் இடத்தையும், தனி இசைப் போட்டியில் தி.ஆர்த்திகா இரண்டாம் இடத்தையும், குழு இசை திரையிசைப்பாடல் பெண்கள் பிரிவு முதலாம் இடத்தையும், பரதநாட்டிய அலாரிப்புப் போட்டியில் செல்வன் ந.ஹரிகரன் முதலாம் இடத்தையும், தில்லானாப் போட்டியில் செல்வன் மு.யதுர்சன் இரண்டாம் இடத்தையும் பெற்று வித்தியாலயத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

(ஒ-14-159)

## உயிர்த்த...

மைத்திரிபால சிறிசேன மட்டுமல்லாமல் முன்னாள் பொலிஸ்மா அதிபர், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர், முன்னாள் பாதுகாப்புச் செயலர், தேசியப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஆகியோரும் இழப்பீடு வழங்கவேண்டும் என்று நீதிமன்றம் கட்டளையிட்டது.

போதுமான உளவுத் தகவல்கள் இருந்தும் ஈஸ்டர் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதன் ஊடாக, தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனத் தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டவர்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணைகள் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

இதன்படி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 10 கோடி ரூபாவையும், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜய்வர்த்தன ஆகியோர் தலா 7 கோடியே 50 லட்சம் ரூபாவையும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 5 கோடி ரூபாவையும், தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் ஒரு கோடி ரூபாவையும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீடாக வழங்கவேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்த்தனவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 6 மாத காலத்துக்குள் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதேவேளை, மேற்படி இழப்பீட்டுத் தொகைகள் பெறப்பட்டு, ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு 10 இலட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு 5 இலட்சம் ரூபாவும் இழப்பீடாகப் பகிரப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் கட்டளையிட்டது.

உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் தனது இரு பிள்ளைகளை இழந்த தந்தையான நந்தன சிறிமான்ன, சுற்றுலாத்துறை வர்த்தகர் ஜனக விதானகே, இரு கத்தோலிக்க மதகுருமார், ஷெங்ரில்லா ஹோட்டலில் குண்டுத் தாக்குதலில் சிக்கிய சட்டத்தரணி மோதித்த ஏக்கநாயக்க, கத்தோலிக்க மதத் தலைவர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட 12 தரப்பினரால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-22)

## உணவுத்...

புதுக்குடியிருப்பில் முன்னாள் போராளியான வேலுப்பிள்ளை மாதவமேஜர் கடந்த நான்கு நாள்களாக நீராகாரம்கூட உள்ளெடுக்காது உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தார். பல நூறு தமிழ் மக்களும், தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களும் இந்தப் போராட்டத்துக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு நேற்று வருகைதந்த தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், ரெலோ கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் புளொட் அமைப்பின் உறுப்பினரும் முன்னாள் மாகாண சபை அமைச்சருமான கந்தையா சிவநேசன் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர் என அனைவரும் இணைந்து, தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையை உறுதிப்படுத்தினார்கள். ஒன்றுபட்டுச் செயற்படுவோம் என்று அவர்கள் எழுத்துமூல ஆவணத்தில் கைச்சாத்திட்டனர். இதையடுத்து மேற்படி முன்னாள் போராளியின் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டது. (அ-ம)

(தொடர்புடைய செய்தி பக்.3)

## பதில்...

யாழ். மாநகரசபையின் பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் முகமாக உள்ளூராட்சி ஆணையாளரால் அவர் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டார். யாழ். மாநகரசபையின் முதல்வராக பதவி வகித்த வி.மணிவண்ணன் முன்வைத்த பாதீடு தோற்றகடிக்கப்பட்டது. அதனையடுத்து அவர் கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி பதவி விலகினார். யாழ். மாநகர முதல்வர் பதவி வறிதான நிலையில் யாழ்.மாநகர முதல்வர் தெரிவு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தநிலையில் யாழ். மாநகர சபையின் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் வகையில் பதில் முதல்வராக து.ஈசன் உள்ளூராட்சி ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார். (அ-ச-20)

## தேசிய...

லிங்கம் சந்திரசேகரன் தலைமையிலான குழுவினரால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

வலி.வடக்கு பிரதேசசபை, வலி.மேற்கு பிரதேசசபை, யாழ் மாநகரசபை, சாவகச்சேரி நகரசபை, காரைநகர் பிரதேச சபை உள்ளிட்ட ஐந்து சபைகளுக்கு இதன்போது தேசிய மக்கள் சக்தியால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. முதலாவது அரசியல் கட்சியாக தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் தனது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது. சில சுயேச்சைக் குழுக்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில்சில பிரதேசசபைகளுக்காக இதுவரை கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-20-27)

## கல்வி...

மேகம் சூழ்ந்திருந்த காலப்பகுதியில், வடக்கு - கிழக்கு மாகாண மாணவர்களின் கல்விக்காக டிவகலாலா அரும்பெரும் பாடுபட்டார். அவர் தற்துணிவான நிர்வாகத்திறனும் சமயோசித முகாமைத்துவப் பண்பும் கொண்டவர். நிர்வாக சேவையில் பணிபுரிந்த தமிழ் அதிகாரிகள் மத்தியில் குறிப்பிடத்தக்க ஆளுமை கொண்ட ஒருவராக இவர் விளங்கினார். வடக்கு - கிழக்கு முன்பள்ளிக் கல்வியை முன்னோக்கி நகர்த்துவதில் தன் ஆளுமையால் ஆறுதல் நிறுவனம் மூலம் பல காரியங்களை அவர் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## சுதந்திரதின...

75ஆவது சுதந்திர தின விழாவுக்கான ஏற்பாடுகள்தொடர்பில்விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே நிகழ்வின் ஆரம்பத்தில் சிங்கள மொழியிலும், விழாவின் இறுதியில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் இசைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நமோ நமோ மாதா நூற்றாண்டுக்கு ஒரு படி' என்ற தொனிப்பொருளில் இம்முறை சுதந்திரதின விழா நடைபெறவுள்ளது. சுதந்திர தினக்கொண்டாட்டத்தின் பிரதான நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி காலை 8.30 மணிக்கு காலி முகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள தேசபிதா டி.எஸ்.சேனாநாயக்கவின் உருவச்சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய பின்னர் ஜனாதிபதி செயலக வளாகத்தில் உள்ள தேசிய மாவீரர்களின் உருவச்சிலைகளுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதன் பின்னர் வைபவம் ஆரம்பமாகும். முப்படைகள், பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதை இடம்பெறும். ஆயிரத்து 12 பாதுகாப்புத் தரப்பினர் பங்கேற்கவுள்ளனர்.

ஒன்றரை மணிநேரத்துக்குள் சுதந்திர தின நிகழ்வை நடத்தி முடிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். எனவே, பிரதான சுதந்திர தின நிகழ்வின்போது ஜனாதிபதியின் தேசிய உரை இடம்பெறாது. அன்று மாலை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார். அத்துடன், 2048ஆம் ஆண்டு 100ஆவது சுதந்திர தினம் வரை மாறாத அரச கொள்கையை அமுல்படுத்தும் வகையில், அடுத்த 25 ஆண்டுகளுக்கு அரசின் புதிய சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் அறிவிக்கப்படும் - என்றார். (அ-ம-44)

## போதைக்கு...

மட்டக்களப்பைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே உயிரிழந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபருக்கு எதிரான வழக்கு விசாரணைகளின் அடிப்படையிலான நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவர் கடந்த செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி மறுவாழ்வுக்காக வவுனியா பூந்தோட்டம் முகாமில் சேர்க்கப்பட்டார். போதைப்பாவனையின் விளைவாக அவருடைய உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து, அவர் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இந்த நிலையிலேயே மேற்படி நபர் உயிரிழந்துள்ளார். (அ-ம-110-18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மத்திய அரசின் வீதி

# பிரதேசசபையின் ஆளணி பங்கேற்புடன் புனரமைப்பு

காரைநகரில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான நீண்டகாலமாக புனரமைப்பின்றி காணப்படும் வலந்தலை தொடக்கம் காரைநகர் துறைமுகம் வரையான வீதியை புனரமைப்பதற்கு பிரதேசசபை ஆளணி வளத்தை பயன்படுத்துவதில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் வீதிப் புனரமைப்புக்கு காரைநகர் பிரதேசசபை ஆளணி வளத்தை பயன்படுத்துவதற்கு தவிசாளர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் தலைமையில் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காரைநகர் மக்களின் பங்களிப்பில் வழங்கப்பட்ட மூலப்பொருள்களுடன் சபையின் வாகனங்கள் மற்றும் ஆளணியினருடன் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்க ஆயத்தம் செய்யப்பட்டது. இந்த நிலையில் பிரதேசசபையின் செயலாளரால் சபைஆளணியை புனரமைப்புப் பணிக்கு வழங்க முடியாது என மறுப்புத் தெரிவிக்கப்பட்ட நிலையில் வீதி புனரமைப்பு கைவிடப்பட்டது.

இதுதொடர்பில் சபையின் செயலாளர் கி.விஜேஸ்வரனை தொடர்புகொண்டு கேட்டபோது:-

சபையின் பணியாளர்களை வீதி திருத்தப்பணிக்கு தடுத்தமை உண்மையே. குறிப்பாக எமது பிரதேசசபையின் ஆளுகைக்குட்படாத வீதியை புனரமைக்க எமது ஆளணி வளத்தை எவ்வாறு பயன்படுத்துவது? வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கோரிக்கைக் கடிதம் இன்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. [...] திணைக்கள[...]மான்றின் [...]னிக்காக எமது [...]ளத்தை வழங்க மறுப்புத் தெரிவித்தேன் - என்றார்.

இதனையடுத்து சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டு, சபையின் வளங்களைப் பயன்படுத்தி வீதிப் புனரமைப்பு பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ச-125)


## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய பணிப்பெண் தேவை.

**077 815 3300** (CS/22788)4.6

உழவர் பெருமக்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்

## உழவர் அரிசிக்கடை மருதனார்மடம் சந்தை

**உழவர் திரு நாள் 2023 தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனை**

ஆட்டக்காரி Rs. 223.00 கிலோ (10 கிலோ Rs. 2230.00)

ஆட்டக்காரி தீட்டல் Rs. 220.00 கிலோ (பொங்கல் அரிசி)

மிளகாய் தூள் Rs. 1800.00 கிலோ

வறுத்த சிவப்பு அரிசி மாவு Rs. 370.00கிலோ

(CS 22720)(3/6)

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புத்தக விற்பனை நிலையத்துக்குப் பின்வரும் வெற்றிடங்களுக்கான ஆட்கள் தேவை.

1) விற்பனை பிரதிநிதி 2) Helper- உதவியாளர்
3) சிட்டை எழுதுநர் (ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

சுயவிபரக் கோவையை whatsapp செய்யவும்.

**077 494 9683, 076 154 8866** (CS 22786) (4.6)

## கடை விற்பனைக்கு

**இல.13, செம்மார் தெரு லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் அமைந்துள்ள 25 அடி நீளமும் 16 அடி அகலமும் உடைய கடை விற்பனைக்குண்டு.

விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்:

காலை 9 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

**தொடர்பு:- ஜெயம்**

**077 986 5457**

## மு/மல்லாவி மத்திய கல்லூரி ஆண் மாணவர் விடுதி ஆண் பராமரிப்பாளர் தேவை

கீழ்வரும் தகைமை உடையவர்களின் விண்ணப்பம் மற்றும் கீழே கேட்கப் பட்ட ஆவணங்களுடன் நேர்முகத்தேர்விற்கு மு/மல்லாவி மத்திய கல்லூரியிற்கு 18.01.2023 பிற்பகல் 1.00 மணிக்கு சமுகம் கொடுக்கவும். 16.01.2023 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் தொலைபேசி மூலம் வரவை உறுதிப்படுத்தவும்.

தகைமைகள்

1. க.பொ.த உயர்தரம் 03 பாடம் சித்தி
2. ஆங்கிலமொழி தேர்ச்சி (எழுத. பேச. வாசிக்க)
3. கணினி தேர்ச்சி
4. ஏனைய தகைமைகள்

எதிர்பார்ப்புகள்

1. தங்கி நின்று சேவையாற்றக்கூடியதாக இருத்தல்
2. 03 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றக்கூடிய உறுதிப்பாடு இருத்தல் வேண்டும்.
3. வயதெல்லை 21 மேல்
4. நல்ல உடல் ஆரோக்கியம் உடையவராக இருத்தல்.
5. சேவை மனப்பாங்கு உடையவராக இருத்தல்.
6. தலைமைத்துவப் பண்பு உடையவராக இருத்தல்.
7. இளைப்பாறிய உத்தியோகத்தர் விண்ணப்பிக்கலாம்.

பொருத்தமானவர்களுக்கு 03 நேர உணவு. தங்குமிடம் மாதாந்தக் கொடுப்பனவு. 03 நாட்கள் விடுமுறை வழங்கப்படும்.

**தொடர்பு:- 0212060735- 0770802160**

விடுதி நிர்வாகம்
மு/மல்லாவி மத்திய கல்லூரி
விடுதிச்சபை.
மு/மல்லாவி மத்திய கல்லூரி
தேசிய பாடசாலை

## மணப்பெண் தேவை

01. யாழ்ப்பாணம். Romancatholic கௌரவகுலம் (P). 1986. B.Sc (IT). Software Engineer, Germany Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 33172.
02. சாவகச்சேரி. இந்து கௌரவகுலம் (V),1979, ரேவதி. Business Germany Citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதி வெண் - 31825.
03. யாழ்ப்பாணம். இந்து கௌரவகுலம் (V).1985, ரேவதி. Divorce (Nullified), Computer Engineering, Germany Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதி வெண் - 31625.
04. கொழும்புத்துறை. கௌரவகுலம் (V), Romancatholic 1993, அத்தம், MSC, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 32886.
05. தெல்லிப்பளை - மீசாலை. கௌரவகுலம் (V). Romancatholic. உத்தரம். Auto Mobile Engineer (UK) Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதி வெண் - 31313.
06. ஊர்காவற்துறை. Romancatholic. கௌரவகுலம் (V),1986, IT Professional, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதி வெண் - 30985.
07. Jaffna Twon சாவகச்சேரி. Romancatholic, கௌரவகுலம் (V),1988, பூரட்டாதி, Bacheler of Engineering (Civil) Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதி வெண் - 29161.
08. ஊர்காவற்துறை - பருத்தித்துறை, Romancatholic, கௌரவகுலம் (V), 1991, Business Administration Accounting, Working in Royal Bank of Canada, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 28799.
09. யாழ்ப்பாணம், கௌரவகுலம் (V), Romancatholic, 1984, BBA, International Business Managent, General Manager, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதி வெண் - 28771.
10. சுண்டிக்குழி. Romancatholic, கௌரவகுலம் (V),1973, Swiss Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதி வெண் - 27892.
11. சங்கானை. இந்து கௌரவகுலம் (V), 1976, மகம். B.Sc, IT Professional Divorce (Nullified), Canada Citizen Vegetarian மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

**தொடர்புகளுக்கு : S.Sarma J.P (Astrologer)**

**Whatsapp : 077 803 8193** (CS 22972)(3.6)


## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 01 . 01 . 1935

இறையடியில் 12 . 01 . 2023



### திருமதி கைலாயப்பிள்ளை பகவதி

இருபாலையை பிறப்பிடமாகவும், வரியப்புலம் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயப்பிள்ளை பகவதி நேற்று (12.01.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரேசு சின்னத்தங்கம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான செல்லர் தங்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கைலாயப்பிள்ளை அவர்களின் அன்புத் துணைவியாரும், இராமதாஸன், சோமேசன், விமலாதேவி, புஸ்கலாதேவி, தங்கேஸ்வரி, சிவயோகநாதன், ஶ்ரீதரன், தனஞ்செயன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசந்தராணி, சுலோஷனா, மதியழகன், ஜெயக்குமார், கௌரீஸ்வரன், காலஞ்சென்ற றூபரட்னேஸ்வரி, ஜெயமதி, சுஜாத்தா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தர்ணிகா, ஜெசிக்கா, வலந்திகா, கம்சன், மஜிக்கா, குலராஜ், மிதுஷாந் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், மதுசன், லக்ஸன், சுபானு, பிரவிந், ரதுஷன், பிரார்த்திகா, இந்துஜன், நிதர்ஷன், துபிக்கா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், ஜெகசோதி, ரத்தினசிங்கம், திலகவதி, கருணாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மார்க்கண்டு (காலஞ்சென்ற), நவரட்ணம் (காலஞ்சென்ற), நடராஜா, கனகம்மா கனகசபை ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜதன் அவர்களின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2023) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வரியப்புலம், சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 22801) 1/6

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org